# மயிலை அறுபத்துமூவர் நாயன்மார் திருவீதி உலா

நமது பாவங்களை போக்க கோவிலுக்கு செல்கிறோம் அதுபோல கோவிலில் எதிர்பாரத விதமாக நிகழும் ஆசார அனுஷ்டான பிழைகளால் இறைவனின் சக்தி குறையாமல் இருக்க ஒவ்வொரு வருடமும் செய்யப்படும் பூஜைத்தான் பிரம்மோற்சவம்.

திதி அல்லது நட்சத்திரத்தின் அடிப்படையில் துவங்கும் இந்த பத்துநாள் திருவிழா காப்பு கட்டி பின்னர் கொடி ஏற்றி, மிகவும் சிரத்தையாக இறைவனுக்காக இறைவனுக்கு நடைபெறும் வைபவம் தான் பிரம்மோற்ச்சவம்.

ஒவ்வொருநாளும் இறைவனுக்கு பலவிதமான வழிபாடுகளால் உபசாரங்கள் செய்யப்பட்டு சிவாகம விதிப்படி கலசத்தில் ருத்திர மந்திரங்களால் சக்தி ஏற்றம் செய்து பின்னர் சாமி சிலைகளுக்கு கலசாபிஷகம் செய்விக்கப்பட்டு இறைவன் குடியிருக்கும் இடத்தில் நடந்த தெய்வகுற்றங்கள் களையப்பட்டு இறைவனில் திருமேனி தூய்மைப்படுத்தப்படும். தினமும் கோவிலைச்சுற்றி 8 திசைகளிலும் அஸ்திர தேவர் முன் செல்ல திக்பாலகர் பூஜை செய்விக்கப்படும்.

வேள்விகளால், அர்ச்சனைகளால், 16 வித உபசாரங்களால் இறைவனை போற்றும் இந்த நாட்களில் திருக்கோவிலை சுற்றி வரும் தேர்பவனியில் மூலவர், பஞ்சமூர்த்தி, நால்வர் புறப்பாடு இருந்தாலும், முடிவில் சிவத்தொண்டிற்காக பல இன்னல்களை அனுபவித்து தூய்மையான பக்தி நெறிபரப்பிய 63 நாயன்மார்களும் இறைவனை வலம் வந்து நன்றி போற்றும் தூயத்திருநாள்தான் "அறுபத்துமூவர் வீதிஉலா" உற்சவம்.

சென்னை மயிலையில் திருஞான சம்பந்தர் பெருமானர் காலம் (சுமார் 7ஆம் நூற்றாண்டு) முதல் நடைபெறும் இந்த உற்ச்சவமே தமிழகத்தில் அறுபத்து மூன்று நாயன்மார்களுக்கு மிகசிறப்பாக நடத்தப்பட்டு சென்னையில் அதிக எண்ணிக்கையில் பக்தர்கள் கலந்துக்கொள்ளும் விழாவாகும்.

இறுதியாக உற்சமூர்த்திகள் புனித நீராடி(தீர்த்தவாரி) முடிந்ததும் இறைவனுக்கு திருக்கல்யாணம், கொடிஇறக்கம் நடைபெறும். பிரம்மோற்ச்சவ நிகழ்ச்சியின் ஒருபகுதியே அறுபத்துமூவர் புறப்பாடு.

கோவிலை தூய்மைப்படுத்தும் இந்த பிரம்மோற்சவத்தில் பங்கெடுத்தால் நமது பாவங்கள் நீங்கி புண்ணியம் கிட்டும்

© காப்புரிமை 2010 - 27.3.2010

பாலு.சரவண சர்மா

பாலு சரவண சர்மா

*பழைய தாம்பரம் கிராம பரம்பரை புரோகிதர்- ஜோதிடர்*

எண் 9, 4வது தெரு, கல்யாண் நகர், தாம்பரம்(மே), சென்னை 45, பாரத நாடு. தொலைபேசி: 91 44 2226 1742, 91 98403 69677

மின்னஞ்சல்: **prohithar@gmail.com** இணையம்: **www.prohithar.com**